# புதிய இளைஞர் கொள்கை (Youth Policy) அறிமுகம் செய்யப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்புகள்... 7- ஆம் பக்கத் தொடர்ச்சி

9. அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை Hockey ஆடுகளம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அரியலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தற்போது மண் ஆடுகளத்தைப் பயன்படுத்தி பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டங்களில் அதிகளவிலான திறமை வாய்ந்த Hockey விளையாட்டு வீரர் வீராங்கனைகள் பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்பதை ஊக்குவித்திடும் வகையில் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் செயற்கை இழை Hockey ஆடுகளம் அமைக்கப்படும்.

10. SDAT-யின்கீழ் இயங்கும் விளையாட்டு விடுதிகளில் பயிற்சி பெறும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 2,330-லிருந்து 2,600-ஆக உயர்த்தப்படும் மற்றும் (i) உணவுப்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் 250-லிருந்து ரூபாய் 350-ஆகவும், (ii) சீருடை மானியத் தொகை ரூபாய் 4,000-லிருந்து ரூபாய் 6,000-ஆகவும், (iii) உபகரண மானியத் தொகை ரூபாய் 1,000-லிருந்து ரூபாய் 2,000-ஆகவும் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்கும் 37 விளையாட்டு விடுதிகளில் 20 விளையாட்டுக்களில் 2330 மாணவ மாணவியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு விடுதி மாணவ, மாணவியர்கள் பெருமளவில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான ஊட்ட உணவு, விளையாட்டு சீருடைகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை தரம் உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

11. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு வீரர்களின் செயல்திறனை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்திட Athlete Management System (AMS) எனும் Software செயல்படுத்தப்படும்.

தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் நமது வீரர்கள் நூலிழையில் பெரும்பாலான வெற்றிகளைத் தவற விடுகின்றனர். எனவே, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளது திறனை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்திட Athlete Management System (AMS) செயல்படுத்தப்பட்டு, அதிகளவிலான பதக்கங்கள் வெல்வது உறுதி செய்யப்படும்.

12. தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூரில் Fencing, Badminton, Cycling, Archery மற்றும் Table Tennis ஆகிய விளையாட்டுக்களுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள SDAT டென்னிஸ் விளையாட்டரங்கில் Tennis விளையாட்டிற்கும், வேளச்சேரியில் உள்ள SDAT AGB வளாகத்தில் Swimming மற்றும் Gymnastics விளையாட்டுக்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் (Centre of Excellence) அமைக்கப்படும்.

பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களிடையே அதிகரித்து வரும் விளையாட்டு ஆர்வத்தினை ஊக்குவித்திடும் வகையில், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், மேலக்கோட்டையூரில் Fencing, Badminton, Cycling, Archery மற்றும் Table

வழங்கிடும் வகையில் சென்னை, மேயர் இராதா கிருஷ்ணன் Hockey விளையாட்டு அரங்கில் Hockey விளையாட்டிற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைப்பந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுக்களுக்கான கல்லூரி மாணவியர்களுக்கு சிறப்பு நிலை விளையாட்டு விடுதியும் (Sports Hostel of Excellence), கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவீன வசதிகள் கூடிய புதிய விளையாட்டு விடுதியும் (Sports Hostel) அமைக்கப்படும்.

14. அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் 37 SDAT விளையாட்டு விடுதிகளுக்கு நவீன விளையாட்டு உபகரணங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

### ‘ஸ்டார்’ அகாடமி உருவாக்கப்படும்

**தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் சில விளை யாட்டுக்கள் மிகவும் பிரபலமாக உள்ளது. அவ்விளையாட்டுக்களில் கூடுதல் கவனம் செலுத்தும்பட்சத்தில், அப்பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும். அதனைக் கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் –STAR அகாடமி உருவாக்கப்படும்.**

Tennis ஆகிய விளையாட்டுக்களுக்கும், நுங்கம்பாக்கத்தில் உள்ள SDAT டென்னிஸ் விளையாட்டரங்கில் Tennis விளையாட்டிற்கும், வேளச்சேரியில் உள்ள SDAT AGB வளாகத்தில் Swimming மற்றும் Gymnastics விளையாட்டுக்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் (Centre of Excellence) அமைக்கப்படும்.

13. சென்னை, மேயர் இராதாகிருஷ்ணன் Hockey விளையாட்டு அரங்கில் Hockey விளையாட்டிற்கும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் கைப்பந்து மற்றும் கபாடி ஆகிய விளையாட்டுக்களுக்கான கல்லூரி மாணவியர்களுக்கு சிறப்பு நிலை விளையாட்டு விடுதியும் (Sports Hostel of Excellence), கோயம்புத்தூர் மாவட்டத்தில் நவீன வசதிகள் கூடிய புதிய விளையாட்டு விடுதியும் (Sports Hostel) அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் விளையாட்டை மேம்படுத்தி வலுவான விளையாட்டு கலாசாரத்தை உருவாக்குவதிலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்கிறது. அவ்வகையில், உயர்தர பயிற்சி

அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்கள் மற்றும் 37 SDAT விளையாட்டு விடுதிகளுக்கு பல்வேறு நிலையிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்திடவும், அன்றாட பயிற்சிகள் மற்றும் பயிற்சி முகாம்களுக்குத் தேவையான நவீன விளையாட்டு உபகரணங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

15. மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் செயற்கை இழை Hockey ஆடுகளத்துடன் கூடிய முதன்மை நிலை பயிற்சி மையம் மற்றும் நவீன உடற்பயிற்சிக்கூடம் அமைக்கப்படும்.

இந்தியாவின் முதல் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமான தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் இறகுபந்து, மேசைப்பந்து, 8 வரிசை செயற்கை இழை தடகளப்பாதை, சைக்ளிங் வெலோட்ராம் உள்ளிட்ட பல்வேறு உலகத் தர வசதிகள் உள்ளன. இவ்வாண்டு விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக கூடுதல் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.

16. SDAT-ஆல் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்களுக்கான மானியம் ஒலிம்பிக் விளையாட்டிற்கு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாகவும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டிற்கு ரூபாய் 15 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

மாநில விளையாட்டுச் சங்கங்களின் செயல்பாட்டினை ஊக்குவித்திடும் வகையில், மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கான மானியம் ஒலிம்பிக் விளையாட்டிற்கு ரூபாய் 20 இலட்சத்திலிருந்து ரூபாய் 25 இலட்சமாகவும், ஒலிம்பிக் அல்லாத விளையாட்டிற்கு ரூபாய் 15 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும் உயர்த்தப்படும்.

17. புதிய இளைஞர் கொள்கை (Youth Policy) அறிமுகம் செய்யப்படும்.

தமிழ்நாட்டில் இளைஞர்கள் பெரும்பான்மையாக உள்ளதைக் கருத்தில் கொண்டு அவர்கள் நல்லொழுக்கத்துடன் சமூகத்திற்கு உயரிய பங்களிப்பினை அளிக்கச் செய்வதன் முக்கியத்துவத்தைக் கருதி, ‘புதிய இளைஞர் கொள்கை’ அறிமுகப்படுத்தப்படும்.

18. அனைத்து மாவட்டங்களிலும் “விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம்”- STAR அகாடமி உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் சில விளை யாட்டுக்கள் மிகவும் பிரபலமாக உள்ளது. அவ்விளையாட்டுக்களில் கூடுதல் கவனம் செலுத்தும்பட்சத்தில், அப்பகுதியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பல்வேறு உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் மகத்தான வெற்றிகளைப் பதிவு செய்ய இயலும். அதனைக் கருத்தில் கொண்டு, தகுதியான பயிற்றுநர்களை மாவட்டந்தோறும் குறிப்பிட்ட விளையாட்டுக்களில் நியமனம் செய்து வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் உயரிய தரத்திலான விளையாட்டு திறன் மேம்பாடு மற்றும் அங்கீகார மையம் -STAR அகாடமி உருவாக்கப்படும்.

19. SDAT கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள் மற்றும் வெளி விளையாட்டரங்கங்களின் கட்டமைப்பு வசதிகள், மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்திடும் வகையில் மாற்றி அமைக்கப்படும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிர்வாகத்தின்கீழ் இயங்கும் அனைத்து மாவட்டங்களில் உள்ள உள் மற்றும் வெளி விளை யாட்டரங்கங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்திடும் வகையில் கட்டமைப்பு வசதிகள் மாற்றி அமைக்கப்படும்.

20. தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஊக்கத் தொகை ரூபாய் 14 இலட்சத்திலிருந்து ரூபாய் 28 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் மற்றும் 30 எண்ணிக்கையிலான நவீன Air Rifle ரக துப்பாக்கிகள் வாங்கிடவும் நிதி உதவி அளிக்கப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு சிறந்த பயிற்சி அளிக்க தமிழ்நாடு அரசு பல்வேறு விதமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் இவ்வாண்டு தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்படும்.

21. 2024 ஆம் ஆண்டு முதல் நாட்டு நலப்பணித் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் சிறப்பு முகாம்களுக்கு ரூபாய் 50 இலட்சம் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் சமூக சேவைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளனர். ஆண்டுதோறும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளை நாட்டு நலப்பணித் திட்டம் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய சிறப்பு செயல்பாடுகளுக்கு நாட்டு நலப்பணித் திட்ட அமைப்பிற்கு ரூபாய் 50 இலட்சம் தொடர் செலவினமாக வழங்கப்படும்.

22. வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் (Champions Development Scheme) கீழ் ஒரு விளையாட்டு வீரருக்கு ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் நிதி உதவி ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் வீரர்கள், வீராங்கனைகள் வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவித் தொகை ஆண்டிற்கு ரூபாய் 2 இலட்சத்திலிருந்து ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

23. தலைசிறந்த பத்து விளையாட்டு வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் Expert Coaches-ஆக பணியமர்த்தப்படுவர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர் வீராங்கனையர்கள் உயரிய நிலையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கம் வெல்லும் உயர்ந்த நோக்கில், தலைசிறந்த பத்து விளையாட்டு வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் நிபுணத்துவ பயிற்றுநர்களாகப் பணியமர்த்தப்படுவர்.

24. சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நவீன வசதிகளுடன்கூடிய உயர் செயல்திறன் மாணவர் விடுதி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

சென்னையில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் தற்போது 345 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மூன்று (விளையாட்டு விடுதி, சிறப்பு நிலை விளையாட்டு விடுதி மற்றும் முதன்மை நிலை மையம்) வகையிலான தங்குமிட வசதிகளுடன்கூடிய விளையாட்டு விடுதிகளில் உள்ளனர். தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு மாணவர்கள் தங்கி பயிற்சி பெற ஏதுவாக, நவீன வசதிகளுடன்கூடிய உயர் செயல்திறன் மாணவர் விடுதி ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவாகள் அறிவித்தார்.

---

திண்டுக்கல் மாவட்டம் - கொடைக்கானலில் விளம்பரப் பலகை காற்றினால் சாய்ந்த விபத்தில்

## உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜுன் 28 -

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகே விளம்பரப் பலகை பொருத்தப்பட்ட சிக்னல் போஸ்ட் காற்றினால் சாய்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியும் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் நேற்று வெளியிட்ட இரங்கல் செய்தி வருமாறு:-

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கொடைக்கானல் நகரம், கொடைக்கானல் பேருந்து நிலையம் அருகே உள்ள விளம்பரப் பலகை பொருத்தப்பட்ட சிக்னல் போஸ்ட் நேற்று (26.06.2024) காலை 9.00 மணியளவில் எதிர்பாராதவிதமாக பலத்த காற்றினால் சாய்ந்த விபத்தில் அப்பகுதியில் தள்ளுவண்டியில் இலைகளை ஏற்றிசென்றுகொண்டிருந்த கொடைக்கானல் தெரசா நகரைச் சேர்ந்த திரு. அந்தோணிதாஸ் (வயது 55) த/பெ. எட்வர்ட் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியை அறிந்து மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன். இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

விவசாயம், தொழில்துறை, சேவை துறைகளுக்கு முன்னுரிமை

## மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி !

### நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரை!

புதுடெல்லி, ஜுன் 28-

18வது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் என்பதால், இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு உரையாற்றினார். முன்னதாக குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து குதிரைப் படை புடைசூழ திரௌபதி முர்மு நாடாளுமன்றம் அழைத்து வரப்பட்டார். அவரை பிரதமர் மோடி, குடியரசு துணைத் தலைவர் ஜெகதீப் தன்கர், மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் வரவேற்றனர்.



தொடர்ந்து, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தொடரில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் முர்மு, மக்களவைத் தேர்தல் உலகின் மிகப்பெரிய தேர்தலாக நடந்துள்ளது என்றார். விவசாயம், தொழில் துறை, சேவைத் துறைக்கு சமமான முன்னுரிமை வழங்கப்பட்டு வருவதாக கூறினார். மாநிலங்களின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்ற சிந்தனையின் அடிப்படையில் முன்னேற்ற பாதையில் இந்தியா செல்வதாக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தெரிவித்தார்.

**எதிர்க்கட்சிகள் முழக்கம்!**

நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி குறித்து பேசினார். அப்போது அவையில் எழுந்து நின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள், மணிப்பூரில் நடைபெற்ற வன்முறை சம்பவம் தொடர்பாக பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முழக்கமிட்டனர். இதே போல், மருத்துவக் கல்லூரி குறித்தும், தேர்வு முறைகள் குறித்து குடியரசுத் தலைவர் பேசும் போது நீட் தேர்வுக்கு எதிராக இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முழக்கங்களை எழுப்பினர்.

---


10.5% இடஒதுக்கீடு: அ.தி.மு.க. ஆட்சியில் அவசர கதியில் நிறைவேற்றம்! உண்மையில் அது கிடைக்க வேண்டுமானால்

## மக்கள் தொகை - சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டு வர முடியும்!

### சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ்.ரகுபதி விளக்கம்!

சென்னை, ஜுன் 28-

சட்டப் பேரவையில் 24.6.2024 அன்று உயர் கல்வி மற்றும் பள்ளிக் கல்வித்துறை மானியத்தின் போது, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலளிக்கையில், “வன்னியர் சமுதாயத்திற்கான 10.5% இட ஒதுக்கீடு, அ.தி.மு.க. ஆட்சியில் அவசர கதியிலே நிறைவேற்றப்பட்டது என்றும், உண்மையில் அம்மக்களுக்கு அது கிடைக்க வேண்டுமானால், மக்கள் தொகை கணக்கெடுப்பை, சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டு வர முடியும்” என்று குறிப்பிட்டார்.



இதுகுறித்து சட்டப் பேரவையில் பென்னாகரம் பா.ம.க. உறுப்பினர் ஜி.கே.மணி பேசுகையில், குறுக்கிட்டு பேசிய சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டதாவது:-

உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் வன்னியர் சமுதாயத்திற்காக 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வேண்டும் என்பதை வலியுறுத்தி இங்கே பேசினார்கள்.

கடந்த ஆட்சியிலே அந்த 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டது. ஆனால் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் இரண்டுமே அந்த உள் ஒதுக்கீட்டை இரத்து செய்துவிட்டது. காரணம், சரியான தரவுகளுடைய அடிப்படையிலே கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு, பொருளாதாரத்தினுடைய பிரச்சினைகள் இவற்றைப் பற்றிய சரியான தரவுகளோடு கொண்டுவராமல் இந்தத் திட்டத்தை அவசர கதியிலே நிறைவேற்றிய காரணத்தினாலேதான் அது இன்றைக்கு இரத்து செய்யப்பட்டிருக்கிறது உயர்நீதிமன்றத்தாலும், உச்சநீதிமன்றத்தாலும்.

**ஒன்றிய அரசுக்கு முதல்வர் கோரிக்கை!**

எனவே, இந்தக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு போன்ற தரவுகள் இன்றைக்கு கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்றைக்கு இந்தப் பரிந்துரைகளை எல்லாம் ஆராய்ந்து அறிக்கை அளித்திட நம்முடைய ஓய்வுபெற்ற நீதியரசர் பாரதிதாசன் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு கூடுதல் Terms of Reference அது அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையிலே இந்த ஆணையம் விரைவான ஆய்வுகளைத் தர வேண்டுமென்பதற்காக அரசாங்கமே கல்வி, வேலை வாய்ப்பு போன்றவைகளுக்கான தரவுகளை இன்றைக்கு அரசாங்கம் திரட்டி தந்திருக்கிறது. ஆனால், சமூகம், பொருளாதார மேம்பாடு போன்ற தரவுகள் திரட்டித் தரப்பட வேண்டுமென்று சொன்னால் அங்கே மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுத்தாக வேண்டும். சாதிவாரி கணக்கெடுப்பு எடுத்தாக வேண்டும். இதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அரசிற்கு சாதிவாரிக் கணக்கெடுப்பை 2001க்குப் பிறகு நடத்தப்படவில்லை. எனவே, சாதிவாரிக் கணக்கெடுப்பை நீங்கள் நடத்துங்கள் என்கின்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள்.

மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் நடத்தினால்தான், சமூக பொருளாதார மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பை அரசு திரட்டித் தந்தாலும், அந்த சமுதாயத்தின் பொருளாதார மேம்பாடு மற்றும் அவர்களின் பொருளாதாரம் பற்றிய தரவுகள் இவற்றை நாம் சாதிவாரிக் கணக்கெடுப்பு மூலமாக மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மூலமாகத்தான் கொண்டுவர முடியும். எனவேதான் நாங்கள் இதை வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இன்றைக்கு நீங்களும் ஒன்றிய அரசின் கூட்டணியில் இருக்கின்றீர்கள். எங்கள் கோரிக்கையை நீங்களும் வலியுறுத்தி, மிக விரைவிலேயே சாதிவாரிக் கணக்கெடுப்பினை நடத்த வைத்து, அதன் பிறகு இந்த இட ஒதுக்கீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த அரசு அதற்கு எந்தவகையிலும் தடையாக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**பீகாரில் ரத்து செய்யப்பட்டுள்ளது!**

அப்போது முதல்வர் அவர்கள் கூறுகையில், இப்போது நீங்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தக் கூட்டணிக் கட்சியோடு பேசி, நாடு முழுவதும் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தி, அதன்பிறகுதான், இதை அமல்படுத்த முடியும். ஏற்கெனவே பீகார் மாநிலத்தில் இது போன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அது நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

**பெயரளவில் கொண்டு வருவதில் என்ன நன்மை?**

தொடர்ந்து பேசிய அமைச்சர் எஸ்.ரகுபதி, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று, பீகார் மாநிலத்தில் இவ்வாறு சாதி வாரிக் கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு அது உயர் நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டுவிட்டது. எனவே, அதை மீண்டும் நாம் செய்தாலும், மீண்டும் உயர் நீதி மன்றத்தால் ரத்து தான் செய்யப்படும். அவ்வாறு ரத்து செய்யப்படுவதில் உங்களுக்கு என்ன நன்மை இருக்கிறது? எனவே மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் இதனை மேற்கொண்டால், யாருக்கும் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. பெயரளவில் கொண்டுவருவதில் என்ன நன்மை இருக்கிறது? உண்மையிலேயே அது கிடைக்க வேண்டுமென்கின்ற உணர்வோடு கொண்டுவர வேண்டுமானால், மக்கள் தொகைக் கணக்கெடுப்பை சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்திதான் கொண்டுவர முடியும். ஏனென்றால், நீதிமன்றத் தீர்ப்புகள் அப்படித்தான் இருக்கின்றன. உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் அவ்வாறுதான் வழங்கியிருக்கின்றன. இதனை பீகார் மாநிலம் செய்த போது, அந்த உயர் நீதிமன்றம் அதனை ரத்துசெய்துவிட்டது.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி குறிப்பிட்டார்.